

# ஆயுதம் தரித்தவர்களில் நான் “இராமன்”

*-பகவத்கீதையில் (10.31) பகவான் ஸ்ரீகிருஷ்ணர்-*

*ஸ்ரீராமர் என்றதும் போற்றுதற்குரியது ஸ்ரீராமரின் வீரமும், கருணையுமே. மேலும் பகவான் ஸ்ரீகிருஷ்ணரே பகவத்கீதையில் (10.31), 'ராம: ஷஸ்த்ர-ப்ரதாம்-அஹம்' ஆயுதம் தரித்தவர்களில் நான் 'இராமன்' என்று குறிப்பிடுகிறார். இவற்றை உணர்த்தும் வகையில் வால்மீகி ராமாயணத்திலிருந்து இங்கு மலர்கிறது ஸ்ரீராம லீலை.*

**ஸ்ரீ**ராமர் அவதரித்து விட்டார். மன்னர்கள், மக்கள், முனிவர்கள், சாதுக்கள் என அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர். குறிப்பாக விஸ்வாமித்திரர் மிக மிக மகிழ்ச்சியடைந்தார். ஏனென்றால் அச்சமயம் அவரது தவத்தையும், யாகத்தையும் தடைசெய்வதற்கு அரக்கர்கள் பலர் இடையூறு செய்து வந்தனர். எனவே அந்த அரக்கர்களை கொல்வதற்காக, தசரதரின் அரண்மனையிலிருந்து ஸ்ரீராமரையும், லெக்ஷ்மணரையும் அழைத்துச் சென்றார் விஸ்வாமித்திரர்.

ஸ்ரீராமரும் லெக்ஷ்மணரும் சாக்ஷாத் கிருஷ்ணரும், பலராமரின் அவதாரங்களாக திகழ்ந்ததால் பகவானுக்கே உரிய அதிஅற்புதமான சக்திகளைப் பெற்றிருந்தனர். எனவே கொடிய தாடகை அரக்கி உட்பட அசுரர்கள் பலரை எளிதில் வதம் செய்தனர். இந்நிகழ்ச்சிக்கு பிறகு விஸ்வாமித்திரர், ஸ்ரீராமரையும், லெக்ஷ்மணரையும் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்றார்.

## ஜனகமகாராஜாவிடம் இருந்த 'அற்புதமான வில்'

குறிப்பாக, அச்சமயம் மிதிலை எனும் நகரில் ஜனக மகாராஜா நடத்த இருந்த மிகப்பெரும் யாகம் ஒன்றிற்கு அழைத்துச் சென்றார். மேலும் ஜனக மகாராஜாவிடம், மிக மிக புகழ்பெற்ற 'சிவ தனுசு' ஒன்று பல ஆண்டு காலமாக பூஜிக்கப்பட்டு வந்தது. இந்த தனுசை, ஸ்ரீராமருக்கும், லெக்ஷ்மணருக்கும் காண்பிக்க விரும்பினார். ஸ்ரீராமரும், லெக்ஷ்மணரும் வழிநெடுகிலும் மிதிலையின் அழகை ரசித்தவாறு, விஸ்வாமித்திரருடன் ஜனக மகாராஜாவின் யாகசாலையை அடைந்தனர். அங்கு யாகத்தை நடத்துவதற்காக உலகம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான முனிவர்கள் வந்திருந்தனர். இவர்களையெல்லாம் பார்த்த ஸ்ரீராமர் மிகவும் மகிழ்ச்சியுற்றார்.

விஸ்வாமித்திரரின் வருகையை அறிந்த ஜனக மகாராஜா, விரைந்து வந்து அவரை வரவேற்று உபசரித்தார். “மாமுனிவரே! தாங்கள் என் ராஜ்யத்திற்கு வந்திருப்பதை பெரும் பாக்கியமாக கருதுகிறேன். நடக்கவிருக்கும் வேள்வி நன்முறையில் நடக்க ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்” என்றார். பதிலுக்கு விஸ்வாமித்திரரும் மகிழ்ச்சி தெரிவித்தார். பின்னர் ஜனக மகாராஜா, விஸ்வாமித்திரரின் அருகில் இருந்த இரண்டு இளைஞர்களையும் பார்த்து, இவர்களது தோற்றம் தெய்வாம்சம் பொருந்தியது போல் உள்ளதே? இவர்கள் யார்? எங்கிருந்த வந்துள்ளார்கள்? என்று ஆவலுடன் கேட்டார்.

“இவர்கள் அயோத்தி நாட்டு மகாராஜா தசரதரின் மைந்தர்கள். ராமர் மற்றும் லெக்ஷ்மணர். எனது யாகத்திற்கு இடையூறு செய்த இராக்ஷர்களை கொல்வதற்காக இவர்களை அழைத்து வந்தேன். தற்சமயம் இங்கு வந்ததன் காரணம், உம்மிடம் இருக்கும் அற்புதமான வில்லை

இவர்களுக்கு காட்டுவதற்காகத் தான்' என்று பதிலளித்தார் விஸ்வாமித்திரர்.

இதன் பின்னர் ஜனகமகாராஜா, பிரம்மாண்டமான அந்த வில்லை கொண்டுவருமாறு தனது சேவகர்களிடம் ஆணையிட்டார். இதற்கிடையில் அந்த வில்லின் பெருமைகளை பற்றியும் கூறலானார்.

## வில் வந்த வரலாறு

"நீண்ட நாட்களுக்கு முன் சிவபெருமான் இந்த பிரம்மாண்டமான வில்லை தட்சன் மற்றும் தேவர்களை தண்டிக்க பயன்படுத்தினார். தேவர்களோ தாங்கள் செய்த தவற்றை உணர்ந்து, சிவபெருமானிடம் பிரார்த்தனைகள் செய்து அவரது கோபத்தை தணித்தனர். இதனால் மகிழ்ச்சியடைந்த சிவபெருமான், தனது வில்லை தேவர்களுக்கே பரிசாக அளித்து விட்டார். தேவர்கள் 'நிமி' அரசரின் மூத்தமகனாகிய என்னுடைய மூதாதையரான தேவவ்ரதரிடம் இந்த வில்லை ஒப்படைத்தனர். தற்சமயம் என்னிடம் உள்ளது" என்று ஜனகமாகாராஜா வில் வந்த வரலாறு பற்றி விவரித்தார்.

இப்படியாக வில்லைப் பற்றி கூறிய ஜனகர், வில் தொடர்பாக தன் மகளான சீதையைப் பற்றியும் பேசலானார். "பல வருடங்களுக்கு முன் ஒருநாள், யாகம் செய்வதற்காக நிலத்தை சுவர்ண கலப்பையால் நான் உழுது கொண்டிருந்தேன். அப்போது அங்கே பெட்டி ஒன்றில் ஒரு பெண் குழந்தை இருப்பதைக் காண நேரிட்டேன். தெய்வீகத் தோற்றம் பொருந்திய அக்குழந்தையைக் கண்டதும், பாதுகாப்பாக எனது அரண்மனைக்கு கொண்டு வந்தேன். பிறகு 'சீதா' என்ற பெயரை சூட்டி எனது அன்பிற்கும் பிரியத்திற்கும் உரிய செல்ல மகளாக வளர்த்து வருகிறேன். நாளடைவில், அரசகுமாரர்கள் பலர், சீதாவின் மிகச் சிறந்த அழகினாலும், சிறப்பினாலும் வசீகரிக்கப்பட்டு அவளை மணக்க விரும்பினார்கள். ஆனால் நானோ அவர்களிடம், சீதா சாதரண பெண்ணல்ல என்றும், அவரை மணக்க விரும்புபவர் மிகச்சிறந்த வீரம் உடையவராக இருக்க வேண்டும் என்று கூறினேன். இதற்கு அவ்வரசகுமாரர்கள், எந்த மாதிரியான வீரத்தை நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள்? என்று கேட்டனர். உடனே நான் இந்த அபூர்வமான சிவபெருமானின் வில்லைக் காண்பித்து இந்த வில்லின் நாண் ஏற்றச் சொன்னேன்".

## சீதா தேவியின் சிறப்பு

ஜனக மகாராஜா ஏன் இவ்வாறு கூறினார் என்பது குறித்து ஸ்ரீலபிரபுபாதா கூறுகையில், "ஜனகரின் அரண்மனையில் மிகப்பெரிய வில் ஒன்று இருந்தது. முழுமையான இரும்பினால் ஆன வில். கடினமான வில். நீண்ட காலமாக அங்கே இருந்தது. ஒருநாள் சீதாதேவியார், தரையை சுத்தம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது தனது இடது கரத்தினால் சீதாதேவி அந்த வில்லை தள்ளி வைத்தார். அந்த வில் மிக மிக கனமானது. ஆனால் சீதாதேவியோ தனது இடது கரத்தினால் அதை தள்ளி வைத்தார். அவரது தந்தையார் அதைப் பார்த்து, இந்த பெண், மிகவும் அற்புதமானவள். அவளால் இதைத் தூக்க முடிகிறது. யாரும் இந்த வில்லை தூக்க முடியவில்லை. ஆனால் இவள் தன்னுடைய இடது கரத்தினாலேயே தூக்கி விட்டார். அப்படியானால் யார் ஒருவர் இந்த வில்லை உடைக்கிறாரோ அவரே எனக்கு மருமகனாக முடியும்.

**5000 வலுவான வீரர்கள், எட்டுச் சக்கரங்கள் பூட்டப் பெற்ற ஒரு வண்டியை இழுத்து வந்தனர். அவ்வண்டியில் இருந்த மிக பலம் வாய்ந்த பெட்டி ஒன்று இருந்தது. அந்த பெட்டியில் தான் அதி அற்புதமான அந்த வில் வைக்கப்பட்டிருந்தது.**

எனவே எந்த இளவரசர் இந்த வில்லை தூக்கி உடைக்கிறாரோ. அவரே எனது மருமகனாக முடியும் என்று அறிவித்தார்" என்று குறிப்பிடுகிறார்.

"எந்த அரசகுமாரர்களாலும் இந்த வில்லை தூக்கக் கூட முடியவில்லை. அப்படியிருக்க, வில்லை எடுத்து வளைத்து நாண் ஏற்றுவது பற்றி என்ன கூற? இதனால் மிகவும் இகழ்ச்சி அடைந்தனர் அவ்வரசகுமாரர்கள். எனவே அவர்கள் கூட்டமாக ஒன்று சேர்ந்து மிதிலையை தாக்கினார்கள். பன்னிரெண்டு நாள் பயங்கரமாக நடந்த யுத்தத்தில் எனது படைகள் தடுமாறும் நிலை ஏற்பட்டது. எனவே நான் தேவர்களை வேண்டி உதவியை நாடினேன். தேவர்கள் ஒரு தெய்வீக போர்ப்படையை அனுப்பினார்கள். இதனைக் கண்ட அரச குமாரர்கள் பயந்து ஓடி விட்டனர்"

இப்படியாக தொடர்ந்து ஜனகர் கூறுகையில், "மாமுனிவரே! சிவபெருமான் தந்த இந்த அற்புதமான வில்லை ஸ்ரீராமரும், லெக்ஷ்மணரும் காண்பதற்காக இப்போதே இங்கே கொண்டுவரச் செய்கிறேன். ஆனால் அதே சமயம் ஏராளமான அரசகுமாரர்கள் முயன்றும் தூக்க முடியாத இந்த பிரம்மாண்டமான வில்லை, தசரத புத்திரரான ஸ்ரீராமர் தூக்கி, நாண் ஏற்றினால், நிச்சயம் நான் எனது செல்ல மகளை, சீதையை மிகவும் மகிழ்ச்சியுடன் ஸ்ரீராமருக்கு மணமுடித்து வைப்பேன்" என்று கூறினார்.

இப்படி ஜனகர் அறிவித்ததும், விஸ்வாமித்திரரும் மிகுந்த சந்தோமடைந்தார். பின் ஸ்ரீராமரைப் பார்த்து, அவரை தயாராக இருக்குமாறு பணித்தார். ஸ்ரீராமரும் மிகுந்த மரியாதையுடன் ஜனகர் மற்றும் விஸ்வாமித்திரரின் விருப்பத்தை நிறைவேற்ற ஆயத்தமானார்.

அதே வேளையில், 5000 வலுவான வீரர்கள், எட்டுச் சக்கரங்கள் பூட்டப் பெற்ற ஒரு வண்டியை இழுத்து வந்தனர். அவ்வண்டியில் இருந்த மிக பலம் வாய்ந்த பெட்டி ஒன்று இருந்தது. அந்த பெட்டியில் தான் அதி அற்புதமான அந்த வில் வைக்கப்பட்டிருந்தது. சன்னம், சன்னமாக இழுத்து வரப்பட்ட அந்த வண்டி, ஒருவழியாக அவை நடுவே கொண்டு வரப்பட்டது. ஆயிரக்கணக்கான ஜனங்கள், என்ன நடக்கப் போகிறது? என்பதை காண ஆவலுடன் கூடியிருந்தனர்.

முதலில் விஸ்வாமித்திரர், ஸ்ரீராமரிடம் வண்டியிலுள்ள

பெட்டியை திறக்குமாறு கூறினார். ஸ்ரீராமரும் அதே போல் செய்தார். உள்ளே அற்புதமான வில், மாபெரும் வீரத்தைப் பிரகாசித்தது.

இதற்கிடையில் ஜனக மகாராஜா ஐயம் கொண்டார். “சிறந்த தேவர்கள், அரசர்கள், இராக்ஷர்கள், யக்ஷர்கள், கந்தர்வர்கள் மற்றும் நாகர்கள் என பலதரப்பட்ட வீரர்களும் சக்திவாய்ந்த இந்த வில்லை முறிக்க இயலாமல் தோற்றனர். அப்படியிருக்க, சாதாரண இம்மண்ணுலக இளவரசரான ஸ்ரீராமர் இந்த வில்லிற்கு நாண் ஏற்றி விடுவாரா? என்று யோசித்தார். ஆனால் விஸ்வாமித்திரரும், லெக்ஷ்மணரும் சிறிதும் ஐயமுறவில்லை. ஏனென்றால் அவர்களுக்குத் தெரியும் ஸ்ரீராமர் யார் என்றும், அவரது வீரம் எப்படியென்றும்!

பிறகு ஸ்ரீராமர், அந்த வில்லின் முன்பாக வந்து நின்றார். சில நிமிடங்கள் வில்லை வணங்கி பிரார்த்தித்தார். அப்போது தான் அந்த அதிசியத்தக்க ஆச்சர்யம் நடந்தது.

### அபூர்வமான வில்லை நாண் ஏற்றி உடைத்தார் ஸ்ரீராமர்

வெறும் விளையாட்டாக, எந்த வித முயற்சியும் இன்றி, அப்படியே தூக்கினார் அந்த அற்புதமான வில்லை, அதுவும் தனது இடது கரத்தினால்! வில்லை இவ்வளவு எளிதாக தூக்கியதைப் பார்த்த அவையில் கூடியிருந்த அனைவரும் பெருத்த ஆரவாரம் செய்தனர். பின்னர் ஸ்ரீராமர், எல்லோர் பார்வையிலும் வில் தெரியும் வண்ணம் காண்பித்து, வெகு சுலபாக வில்லை வளைத்தார். தொடர்ந்து, அதன் ஒரு முனையில் தொங்கிக் கொண்டிருந்த இருந்த கயிரை இழுத்து மற்றொரு முனையில் கட்டி, கணப்பொழுதில் நாண் ஏற்றினார். அச்மயம் ஸ்ரீராமரின் வளைவிற்கு ஈடுகொடுக்க முடியாமல் வில்லானது, இடி இடித்தது போல் பெரும் ஓசையுடன் இரண்டாக முறிந்தது. அச்சமயம் விஸ்வாமித்திரர், ஜனகர், ஸ்ரீராமர் மற்றும் லெக்ஷ்மணர் தவிர, அவையில் கூடியிருந்த மற்றெல்லா மக்களும், வில் ஒடிந்ததால் ஏற்பட்ட பலத்த ஓசையால் அதிர்ச்சியுற்று தரையில் வீழ்ந்தனர்.

சிறிது நேரத்திற்கு பிறகு ஸ்ரீராமரின் கருணையால் மீண்டும் அவர்கள் தங்கள் சுயநினைவை பெற, எல்லோரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஸ்ரீராமரின் வியத்தகு வீரத்தைப் புகழந்தும், ஸ்ரீராமரின் திருநாமங்களை உச்சரித்தும் போற்றினர். இத்தகவல் அயோத்திக்கும் விரைந்து சென்றது. ஸ்ரீராமர், மகா பலமான சிவதனுசை, வீரத்துடன் நாண் ஏற்றி உடைத்து விட்டார் என்று அறிந்த தசரத மன்னர், உளம் பொங்க மகிழ்ந்தார். பின்னர் ஜனகரின் அழைப்பை ஏற்று ஸ்ரீராமரின் திருமண பேச்சுக்காக மிதிலைக்கு விரைந்தார். இருதரப்பு மன்னர்களும் தங்களின் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள, ஒருமித்த மனதுடன் ஸ்ரீராமர், சீதாதேவியின் திருமணம் நிச்சயமானது. தேவலோகத்தில் இருந்து பூமாரி பொழிய, தெய்வீக இசை முழங்க ஜனக மன்னர் தன் பெண்ணாகிய சாக்ஷாத் மஹா லெக்ஷ்மியான சீதாதேவியை, பகவான் ஸ்ரீராமச் சந்திரரின் கரங்களில் ஒப்படைத்தார்.

காலங்கள் கடந்தன. சூழ்நிலைகள் மாறின.

ஸ்ரீராமர், சீதாதேவி மற்றும் லெக்ஷ்மணருடன் வனவாசத்தில் இருந்த சமயம் அது. ஜனஸ்தானம் என்ற அந்த காட்டுபகுதியில் இருந்த சூர்ப்பனகை, ஸ்ரீராமர்,



லெக்ஷ்மணருடன் தகராறு செய்து, தனது மூக்கு துண்டிக்கப் பெற்றாள். இதனால் கோபமுற்ற சூர்ப்பனகையின் சகோதரன் கரன், 14000 அரக்கர்களுடன் ஸ்ரீராமரை எதிர்த்து போர் செய்தான். ஆனால் ஸ்ரீராமரோ, அத்தனை அரக்கர்களையும் தனிஒரு நபராக எதிர் கொண்டார்.

### 14000 அரக்கர்களை வதம் செய்தார்

இராக்ஷப் படையினர் ஸ்ரீராமரை வளைத்துக் கொண்டு கதை, ஈட்டி, வாள், மற்றும் கோடாரிகளை வீசினார்கள். கரன் ஆயிரம் அம்புகளை சரமாரியாக ஸ்ரீராமரை நோக்கி எய்தினான். பதிலுக்கு ஸ்ரீராமரும் ஆயிரக்கணக்கான அம்புகளை கணப்பொழுதில் எய்து, இராக்ஷர்களின் வில், கொடி, கேடயங்கள், கவசங்கள் மற்றும் அவர்களின் அங்கங்களையும் தவிடு பொடியாக்கினார். கணகற்ற இராக்ஷர்கள் இறந்து விமுந்தனர். இதனால் மேலும் கோபம் கொண்ட மீதி இராக்ஷர்கள், ஸ்ரீராமர் மீது வேகத்துடன் அம்புகளை எய்தனர். வழக்கம் போல் ஸ்ரீராமர் அவற்றையெல்லாம் எளிதாக வீழ்த்தினார். கடைசியாக 14000 இராக்ஷர்களும் ஸ்ரீராமரால் வதம் செய்யப்பட்டனர். இப்படியாக காட்டில் முனிவர்களுக்கு இந்த இராக்ஷர்களால் ஏற்பட்ட தொந்தரவுகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

ஆனால் அதே சமயம் இந்த இராக்ஷப் போரில், ‘அகம்பனன்’ என்ற அரக்கன் மட்டும் இலங்கைக்கு தப்பிச் சென்று, நடந்த விபரங்களையெல்லாம் இராவணனிடம் கூறினான். உடனே இராவணன் வெகுண்டு எழுந்தான் ஸ்ரீராமருடன் போர் செய்ய. ஆனால் அகம்பனன் அவனை தடுத்து, ஸ்ரீராமரின் வீரம் பற்றி கூறலானார்.

“ஸ்ரீராமர் சாதாரணமானவர் அல்ல. ஸ்ரீராமர் நமது 14000 இராக்ஷர்களையும் தனி ஒருவராக கொன்றவர். தனது தம்பி லெக்ஷ்மணரின் உதவியை கூட அவர் நாடவில்லை. அந்த அளவிற்கு அவர் பலம் மிக்கவர். நிச்சயம் உங்களால் ஜெயிக்க இயலாது” என்று விவரித்தான்.

இதற்கு பின் அகம்பனன் மற்றும் சூர்ப்பனகையின் சதிதிட்டத்தால் இராவணன், ஸ்ரீராமரை பழிவாங்கும் எண்ணத்துடனும், தவறான நோக்கத்துடனும் ஸ்ரீராமரின் துணைவியார் சீதாதேவியை அபகரித்து இலங்கைக்கு கொண்டு வர விரும்பினான். இதற்கு உதவ வேண்டி, மாரீசன் என்ற இராக்ஷனை அணுகினான்.

இராவணனின் சதிதிட்டத்தைக் கேட்ட மாரீசன், அப்படியே அதிர்ந்து போய்விட்டான். பின்னர் இந்த தவறான திட்டத்தை கண்டித்து, ஸ்ரீராமரின் வீரத்தைப் பற்றி இராவணிடம் சொல்லத் துவங்கினான்.


### மாரீசன் சொன்ன 'ஸ்ரீராமரின் வீரம்'

"எவன் உனக்கு இந்த திட்டத்தை சொன்னானோ அவன் தான் உனது கொடிய பகைவன். இராவணா! இந்த அறிவற்ற செயலைப் புரிந்தால் அது உன்னுடைய அழிவில் தான் முடியும். ஏன் என்றால் ஸ்ரீராமரின் பல பராக்ரமத்தை நினைத்துக் கூட பார்க்க முடியாது. அது பகவான் விஷ்ணுவின் ஆற்றலை ஒத்தது. கடலிலுள்ள முதலைகள், கடலின் நீர்ச்சுழிகள் போன்றது ஸ்ரீராமரின் பலம் பொருந்திய புஜங்கள். ஸ்ரீராமர் எய்தும் அம்புகள், கடல் அலைகள் போன்று ஓயாதது. ஸ்ரீராமரின் யுத்த களம், கடலின் எல்லை"

"முன்பு ஒரு தடவை நான் தண்டகக் காட்டில் முனிவர்களின் யாகங்களுக்கு தொந்தரவு தந்தேன். அப்போது என்னை தடுப்பதற்காக ஸ்ரீராமர் ஒரே ஒரு அம்பை தான் எய்தினார். அந்த அம்பினால் நான் அப்படியே சுழற்றி வீசப்பட்டு சமுத்திரத்தில் விழுந்தேன். பிறகு அங்கிருந்து தப்பி இலங்கைக்கு வந்து விட்டேன்"

"பிறகு நான் ஸ்ரீராமரை பழிவாங்க வேண்டும் என்று என்னுடன் மூன்று அரக்கர்களை அழைத்துச் சென்று, ஸ்ரீராமரை எதிர்த்து போரிட்டேன். அப்போது அவர், ஆளுக்கொரு அம்பாக மூன்றே அம்புகளை எய்தினார். போரின் துவக்கத்திலேயே மற்ற மூன்று அரக்கர்களும் கொல்லப்பட்டனர். பிறகு நான் உயிர் தப்பி ஓடினேன். ஸ்ரீராமரின் அம்பு, யுத்த களத்தினை விட்டு ஓடுபவர்களை கொல்லாது என்று நினைக்கிறேன். எனவே நான் பிழைக்க நேரிட்டது"

"அன்றிலிருந்து இன்று வரை ஸ்ரீராமரிடமுள்ள பயம் என் மனதை விட்டு அகலவில்லை. தொடர்ந்து ஸ்ரீராமரையே நினைத்தன் பலனாக என்னுடைய மனம் வன்முறை, மற்றவர்களை பழிவாங்கும் குணங்கள் இவற்றிலிருந்து விடுபட்டன. நான் ஒரு முனிவரின் வாழ்வை ஏற்று



யோகத்தை பயின்று வருகிறேன். இருப்பினும் என் பார்வை மரங்களில் படர்ந்தால் என் அமைதி குலைந்து விடுகிறது. மரங்களைப் பார்த்தால் மரவுரிகளை உடுத்திய இராமராகப் பார்கிறேன். பயத்தால் என் இதயம் படபடப்பை அடைகிறது"

"எனவே அரசே! உன்னுடைய திட்டத்தை செயல்படுத்தினால், இதன் விளைவு, இலங்கையும், இராக்ஷர்களும், நீயும் அழிய வேண்டியது தான்! நீ இராமரின் ஆற்றலைப் பற்றி அறியாமல் அழிவை நோக்கி ஓடுகிறாய். இதற்கு காரணம் உனது கட்டுங்கடங்காத காமம் தான். சீதையை கடத்தும் எண்ணத்தை மறந்து விடு. இத்திட்டத்தை கைவிட்டு இலங்கைக்கு திரும்பிசெல். இல்லையென்றால் தேவையில்லாமல் நீ பேரிழப்பை விலைக்கு வாங்குவாய்." என்று அறிவுறுத்தினான்.

ஆனால் இராவணனோ, மாரீசனின் அறிவுரைக்கு செவி சாய்க்கவில்லை. மாரீசனே! நீ என் சதிதிட்டத்திற்கு உதவவில்லை என்றால், உன்னை கொன்றுவிடுவேன் என்று கத்தினான். அதற்கு மாரீசன், "உன்னைப் போன்றவனிடம் மரணமடைவதை விட, ஸ்ரீராமரின் கையில் மடிவதே நன்று" என்று அத்திட்டத்திற்கு மனமில்லாமல் ஒத்துப்போனான்.

கடைசியில் இராவணன், சீதையை கடத்திச் சென்றான். ஹனுமான் மூலம் சீதை இலங்கையில் இருக்கும் செய்தி ஸ்ரீராமருக்கு கிடைத்தது. இராவணனை எதிர்த்து போரிட ஸ்ரீராமர், வானரப் படைகளுடன் ஆயத்தமாய் வந்து நின்றார். எதிர்புறம் கடல் தாண்டி இலங்கை இருந்தது.

இலங்கையில் போர் குறித்த அவசரக் கூட்டம் நடந்தது.

**"ஸ்ரீராமர் சாதாரணமானவர் அல்ல. ஸ்ரீராமர் நமது 14000 இராக்ஷர்களையும் தனி ஒருவராக கொன்றவர். தனது தம்பி லெக்ஷ்மணரின் உதவியை கூட அவர் நாடவில்லை. அந்த அளவிற்கு அவர் பலம் மிக்கவர். நிச்சயம் உங்களால் ஜெயிக்க இயலாது''** - அகம்பனன்

எல்லா அமைச்சர்களும், படைத்தளபதிகளும் அவைக்கு வந்தனர். நல்ல உள்ளமும், பெருங்குணமும் கொண்ட இராவணனின் சகோதரர் விபீஷணர், இராவணனுக்கு நல்ல அறிவுரைகளை வழங்கினார். சீதையை ஸ்ரீராமரிடம் ஒப்படைத்து விடுமாறும் அதன் மூலம் போரை கைவிட்டு விடலாம் என்று வேண்டினார்.

ஆனால் இந்திரஜித் மற்றும் அமைச்சர்கள் எல்லாம் இதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. ஒவ்வொருத்தரும் தங்கள் வீரத்தின் மீது இருந்த கர்வத்தினாலும், வீண் பிடிவாதத்தாலும் போர் செய்ய துணிந்தனர். எனவே இராவணனைப் புகழ்ந்தும், இராமரை இகழ்ந்தும் பேசினர்.

### விபீஷணரின் விவரித்த ஸ்ரீராமரின் சிறப்பு

இதைக் கேட்ட விபீஷணர், ஸ்ரீராமரின் அளவிற்கரிய சக்தியைப் பற்றி விவரிக்கலானார். "ஸ்ரீராமர் தாங்கள் எண்ணுவது போல் சாதாரண மானிடர் அல்ல. அவரின் அம்புகள் இடி மின்னல்களைப் போல் சக்தி வாய்ந்ததும். காற்றின் வேகத்தில் பயணிக்கக் கூடியதுமாகும். அப்படிப்பட்ட அம்புகள் வந்து, இங்குள்ள அனைவரின் தலைகளையும் எடுக்கும் முன்பே, சீதா தேவியை ஒப்படைத்து விடுங்கள்".

"மன்னரே! இங்குள்ள கும்பகர்ணனோ, இந்திரஜித்தோ, மகோதரனோ, கும்பனோ, நிகும்பனோ உள்ளிட்ட யாராலும் ஸ்ரீராமரை எதிர்த்து நிற்க இயலாது. அது போலவே, மன்னரே! தாங்கள் சூரிய தேவனால் பாதுகாக்கப்பட்டாலும் சரி, இந்திரன் அல்லது எமதர்ம ராஜாவின் பாதுகாப்பில் இருந்தாலும் சரி, அல்லது சொர்க்க லோகங்களில் இருந்தாலும் சரி, பூமிக்கு அடியில் சென்றாலும் சரி, ஸ்ரீராமரின் அம்புகளில் இருந்து தப்ப இயலாது."

இவ்வளவு கூறியும் இராவணன் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆகவே விபீஷணர், இலங்கையை விட்டு நீங்கி, ஸ்ரீராமரைச் சரணடைந்தார்.

தூரத்தில் விபீஷணர் வருவதைக் கண்ட வானரப்படையினர், ஸ்ரீராமரிடம் சரணடைவது போல் நம்மை தாக்க வருகிறார் என்று எண்ணின. ஆனால் ஸ்ரீராமர் அவர்களை சமாதானப்படுத்தி, "ஸ்ரீராமரே! நான் உங்களுடையவன் என்று என்னிடம் யார் சரணடைந்தாலும், அவன் இராவணனாக இருந்தாலும் கூட அவனுக்கும் நான் பாதுகாப்பு அளிப்பேன்" என்றார்.

இப்படியாக பகவான் ஸ்ரீராமச்சந்திரர் யாராலும் வெற்றி கொள்ள முடியாத வீரம் பொருந்தியவராக இருந்த போதிலும், சரணடைபவர்களை காப்பவராகவும் இருந்தார்.

### இராவணனுக்கும் கிடைத்தது ஸ்ரீராமரின் கருணை

அதுமட்டுமல்ல யுத்தம் ஆரம்பித்த சமயம், இராவணன் நேருக்கு நேராக வந்து போர்க்களத்தை பார்வையிட்டு ஸ்ரீராமரின் ஆற்றலை காண வந்தான். அப்போது ஸ்ரீராமர் அவனிடம் யுத்தம் செய்து, அவனது எல்லா ஆயுதங்களையும் இழக்கச் செய்தார். கடைசியில் இராவணன், தான் எடுத்த அம்புகள் எல்லாம் ஸ்ரீராமரால் உடைத்தெறியப்பட மிகவும் தளர்ந்து போனான். அச்சமயம் பெருங்கருணைக் கடலான பகவான் ஸ்ரீராமச்சந்திரர், "இராவணா! நீ மிகவும் தளர்ந்து போய் உள்ளாய். யுத்தக்களத்தை விட்டுச் சென்று சற்று ஓய்வு எடுத்து வா" என்று கூறி அவனை விடுவித்தார்.

*யார் ஒருவர் கவனத்துடனும், மரியாதையுடனும் இராமாயணத்தைக் கேட்கிறாரோ, அவர் எல்லா பாவங்கள் மற்றும் வாழ்வின் எல்லாத் தடங்கல்களிலிருந்தும் விடுபடுகிறார். அவர் தன்னுடைய பிரியமானவர்களுடனும், நெருக்கமானவர்களுடனும் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு தேவையான வரங்களை பகவான் ஸ்ரீராமச்சந்திரரிடமிருந்து பெறமுடியும்*

*-வால்மீகி ராமாயணம்-*

அதன் பின்னர் கும்பகர்ணன், இந்திரஜித் என்று படிப்படியாக எல்லா அசுரர்களையும் அழித்த பின், மீண்டும் இராவணனிடம் யுத்தம் செய்து, அவனை வதம் செய்தார்.

பிறகு சீதா தேவியுடன் அயோத்தி திரும்பிய ஸ்ரீராமர், ராஜ்யம் ஏற்று ஆட்சி புரிந்தார். ஸ்ரீராமர் நாடுதிரும்பி ராஜ்யம் ஏற்ற திருநாளே தீபாவளித் திருநாளாக கொண்டாடப்பட்டது. இதற்கு பிறகு ராமராஜ்யம் ஏற்பட்டது.

### ஸ்ரீராம ராஜ்யம்

பகவான் ஸ்ரீராமச்சந்திரரின் ஆட்சியில் பூமி, உயிர்வாழிகளின் எல்லாவிதமான தேவைகளையும் தாராளமாக நிறைவேற்றியது. யாருக்கும் உடல் ரீதியாகவோ, மன ரீதியாகவோ எந்தத் துன்பமும் இல்லை. நோய், மூப்பு, கவலைகள், பயம், சோர்வு இவை யாவும் இல்லாமல் இருந்தது. இறப்பு வேண்டாதவர்களுக்கு அதுவும் கூட இல்லாமல் போனது

ஸ்ரீராமரின் குணங்கள் பூரணமானது, போற்றத்தக்கது. பொதுமக்களுக்கு ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். தன்னலம் இல்லாத அந்தணர்களுக்கு, ஸ்ரீராமர் தனது நிலம், செல்வம், நாலாபக்கமும் இருக்கும் தனது ராஜ்யம் அனைத்தையும் தானமாக அளித்தார். ஆனால் அந்தணர்களோ அவரிடம் மிகவும் திருப்தியடைந்து, பகவானே! தாங்களே இப்பிரபஞ்சத்தின் அதிபதியாவீர். தாங்கள் எங்களுக்கு எதை வழங்கவில்லை? தாங்கள் எங்கள் இதயத்தில், எங்களின் அறியாமையை தங்கள் பிரகாசத்தினால் அழிக்கின்றீர். இந்த பரிசைத் தவிர வேறு என்ன எங்களுக்கு வேண்டும்'' இப்படிக் கூறிய அந்தணர்கள், தங்கள் வாழ்வின் குறைந்தபட்ச தேவைகளுடன் திருப்தியுற்று, பகவான் ஸ்ரீராமச்சந்திரருக்கு எல்லாவற்றையும் தங்கள் ஆசீர்வாதங்களுடன் திருப்பி அளித்தனர்.

* * *

**'ஸ்ரீராமரே! நான் உங்களுடையவன் என்று என்னிடம் யார் சரணடைந்தாலும், அவன் இராவணனாக இருந்தாலும் கூட அவனுக்கும் நான் பாதுகாப்பு அளிப்பேன்''**

**- ஸ்ரீராமர் -**

*Ref: Valmiki Ramayana*